# கோராகின் கலகம் (எண் 16-17)

தேவன் ஒருவரை தன்னுடைய ஊழியத்தை செய்ய அழைத்திருக்கிறாரா அல்லது விலக்கி வைத்திருக்கின்றாரா என்பதை நிச்சயமாக அறிந்து கொள்ள ஏதாவது வழிமுறைகள் இருக்கிறதா? பொதுவாக ஜனங்கள், கர்த்தரால் தாங்கள் பயன்படுத்தபடுவதற்கு தகுதியானவர்கள் அல்ல என நினைக்கின்றார்கள்.

ஆனால் சில நேரங்களில் ஒரு நபரின் பெருமையோ மற்றும் ஆசையோ அவரை ஊழியத்திற்கு தகுதியற்றவராக செய்கிறது. தேவன் ஒருவரை ஊழியத்திற்கு அழைத்து,அவர் மூலமாக தன் கிரியைகளை வெளிபடுத்தி தான் அழைத்தை நிரூபிக்கிறதை இந்த பாடம் சிறந்த முறையில் எடுத்துக் காட்டுகிறது.

அவரால் மட்டுமே ஜனங்களையும்,அவர்களுடைய எண்ணங்களையும் மாற்ற முடியும். தேவனால் மட்டுமே அவரால் கொடுக்கப்பட்ட ஊழியத்தை உறுதிப்படுத்த முடியும்.

இஸ்ரவேலர் வனாந்திரத்திற்கு திரும்பி போன போது,சில மனிதர்கள் பெருமை நிறைந்து நிந்திக்கிறவர்களாய் கூட்டம் கூடி மோசேக்கும்,ஆரோனுக்கும் விரோதமாக எழும்பினார்கள். லேவி கோத்திரத்தை சேர்ந்த கோராகு அவர்களின் தலைவனாக இருந்தான்.

அவனுடன் பிரபலமான 250 தலைவர்களும் குழுவாக இணைந்து, மோசேயிடம், “நீங்கள் மிஞ்சிப் போகிறீர்கள் சபையார் எல்லாரும் பரிசுத்தமானவர்கள். கர்த்தர் அவர்கள் நடுவில் இருக்கிறாரே இப்படியிருக்க கர்த்தருடைய சபைக்கு மேலாக உங்களை ஏன் உயர்த்துகிறீர்கள்” என தைரியமாக குறை கூறினார்கள்.

மோசே அதை கேட்ட போது,முகங்குப்புற விழுந்தான். அவன் கோராகிடம், ’நாளைக்கு கர்த்தர் தம்முடையவன் இன்னான் என்றும்,தம்மண்டையிலே சேர தாம் கட்டளையிட்ட பரிசுத்தவான் இன்னான் என்றும் காண்பிப்பார்.

லேவியின் புத்திரராகிய நீங்கள் மிஞ்சிப் போகிறீர்கள். கர்த்தருடைய வாசஸ்தலத்தின் பணிவிடைகளைச் செய்யவும்,சபையாரின் முன் நின்று அவர்கள் செய்ய வேண்டிய வேலைகளை செய்யவும்,உங்களை தம்மண்டையிலே சேரப்பண்ணும்படி

இஸ்ரவேலின் தேவன் இஸ்ரவேல் சபையாரிலிருந்து உங்களை பிரித்தெடுத்தது போதாதா? இப்பொழுது ஆசாரியப் பட்டத்தையும் தேடுகிறீர்களா?

இதற்காக நீயும் உன் கூட்டதார் அனைவரும் கர்த்தருக்கு விரோதமாகவே கூட்டங்கூடினீர்கள். நாளைக்கு நாம் எலலோரும் அவரவர் தங்கள் தங்கள் தூப கலசங்களை எடுத்து,அவைகளில் அக்கினியையும்,தூபவர்க்கத்தையும் போட்டு கர்த்தருக்கு முன்பாக வந்து நிற்போம். தன்னுடைய ஜனங்களை யார் வழி நடத்த வேண்டும் என்பதை கர்த்தர் தெரிந்தெடுப்பார்'' என்றான்.

பின்னர் மோசே தனக்கு எதிராக கூட்டத்தை ஏற்பாடு செய்த எலியாவின் குமாரனாகிய தாத்தானையும்,ஆபிராமையும் அழைத்தனுப்பினான். அவர்கள், "நாங்கள் வருகிறதில்லை. இந்த வனாந்திரத்தில் எங்களை கொன்று போடும்படி, பாலும்,தேனும் ஒடுகிற தேசத்திலிருந்து எங்களை கொண்டு வந்தது அற்பகாரியமோ? எங்கள் மேல் அதிகாரமும் பண்ணப்பார்க்கிறாயோ? மேலும் நீ எங்களை பாலும்,தேனும் ஒடுகிற தேசத்துக்கு கொண்டு வந்ததும் இல்லை. இந்த மனிதனுடைய கண்களை பிடுங்கப்பார்க்கிறாயோ? இல்லை. நாங்கள் வருகிறதில்லை'' என்றார்கள்.

அவர்களுடைய மாறுபாடான சிந்தனையில் கானான் பாலும்,தேனும் ஒடுகிற தேசமாயிராமல்,அவர்கள் அடிமைகளாக இருந்த எகிப்து,பாலும் தேனும் ஒடுகிற தேசமாக கருதப்பட்டது.

இதனால் மோசேக்கு கடுங்கோபம் மூண்டது. அவன் கர்த்தரை நோக்கி, "அவர்கள் செலுத்தும் காணிக்கையை அங்கீகரியாதிருப்பீராக. நான் அவர்களிடத்தில் ஒரு கழுதையை முதலாய் எடுத்துக் கொள்ளவில்லை. அவர்களில் ஒருவனுக்கும் யாதொரு பொல்லாப்பு செய்யவும் இல்லை'' என்று குற்றமற்றவனாய் கெஞ்சினான்.

மறுநாள் மோசேயும்,ஆரோனும் மற்றும் எல்லா இருநூற்று ஐம்பது மனிதர்களும் தங்கள் தூபகலசங்களை எடுத்து,அவைகளில் அக்கினியையும்,தூபவர்க்கத்தையும் போட்டு,ஆசரிப்பு கூடார வாசலுக்கு முன்பாக வந்து நின்றார்கள்.

அப்பொழுது கர்த்தருடைய மகிமை சபைக்கெல்லாம் காணப்பட்டது. கர்த்தர் மோசேயோடும்,ஆரோனோடும் பேசி, ’இந்த சபையை விட்டு பிரிந்து போங்கள். ஒரு நிமிஷத்திலே அவர்களை அதமாக்குவேன்’’ என்றார்.

அப்பொழுது மோசேயும்,ஆரோனும் முகங்குப்புற விழுந்து, “ஒரு மனிதன் பாவம் செய்திருக்க,சபையார் எல்லார் மேலும் கடுங்கோபம் கொள்வீரோ” என்று கெஞ்சினார்கள்.

அதற்கு கர்த்தர், “கோராகு,தாத்தான் அபிராம் என்பவர்களுடைய வாசஸ்தலத்தை விட்டு விலகிப் போங்கள் என்று சபையாருக்கு சொல். இந்த துஷ்டமனிதரின் சகல பாவங்களிலும் நீங்கள் வாரிக்கொள்ளாதபடிக்கு,அவர்களுக்கு உண்டானவைகளில் ஒன்றையும் தொடாதிருங்கள்’’ என்றார். எனவே எல்லாரும் விலகிப்போனார்கள்.

கலகத்திற்கு காரணமான தலைவர்கள் வெளியே வந்து,தங்கள் பெண்ஜாதிகள் மற்றும் குழந்தைகளோடு தங்கள் கூடாரவாசலிலே நின்றார்கள்.

அப்பொழுது மோசே சபையாரை பார்த்து, “இந்த கிரியைகளையெல்லாம் செய்கிறதற்கு கர்த்தர் என்னை அனுப்பினார் என்றும்,அவைகளை நான் என் மனதின்படியே செய்யவில்லை என்றும் எதினாலே அறிவீர்களென்றால்,இவர்கள் மனிதர்கள் சாகிறது போல் வயதாகி,இயற்க்கையாக மரித்தால் கர்த்தர் என்னை அனுப்பவில்லை. ஆனால் பூமி தன் வாயைத் திறந்து உயிரோடே பாதாளத்தில் இறங்கத்தக்கதாக இவர்களையும் இவர்களுக்கு உண்டான யாவையும் விழுங்கிப் போட்டதேயானால் இந்த மனிதர் கர்த்தரை அவமதித்தார்கள் என்பதை அறிந்து கொள்வீர்கள்” என்றான்.

அவன் இந்த வார்த்தைகளையெல்லாம் சொல்லி முடித்தவுடன்,அவர்கள் நின்றிருந்த நிலம் பிளந்தது. பூமி தன் வாயைத் திறந்து அவர்களையும் அவர்கள் வீடுகளையும்,கோராகுக்குரிய எல்லா மனிதரையும் அவர்களுக்கு உண்டான சகல பொருள்களையும் விழுங்கிப்போட்டது.

அவர்கள் எல்லாரையும் விழுங்கி பூமி மூடிக்கொண்டது. ஜனங்கள் பூமி நம்மையும் விழுங்கிப்போடும் என நினைத்து, பயந்ததினால் அலறியபடி ஓடினார்கள். பின்னர் அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு,தூபங்காட்டின இருநூற்று ஐம்பது பேரையும் பட்சித்துப் போட்டது.

இந்த மனிதர்கள் துணிகரம் கொண்டு கர்த்தருடைய சந்நதியில் தூபங்காட்டியதால் தங்களுடைய அழிவை தாங்களே தேடிக்கொண்டு,கர்த்தருடைய அக்கினியால் பட்சிக்கப்பட்டார்கள்.

பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி, "அக்கினிக்குள் அகப்பட்ட தூபகலசங்களை எடுத்து,அவைகளிலிருக்கிற அக்கினியை அப்பாலே கொட்டிப் போடும்படி ஆசாரியனாகிய ஆரோனின் குமாரன் எலியேசருக்கு சொல். அந்த தூபகலசங்கள் பரிசுத்தமானவை.

தங்கள் ஆத்துமாக்களுக்கே கேடுண்டாக்கின அந்த பாவிகளின் தூபகலசங்களை பலிபீடத்தை மூடத்தக்க தட்டையான தகடுகளாக அடிக்கக்கடவர்கள். அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் அவைகளை கொண்டு வந்ததினால் அவைகள் பரிசுத்தமாயின. ஆரோனுடைய சந்ததியார் மட்டுமே கர்த்தருக்கு முன்பாக தூபங்காட்டும்படிக்கு அவைகள் இஸ்ரவேல் புத்திரருக்கு அடையாளமாக இருக்கும்" என்றார்.

இப்படியெல்லாம் நடந்திருந்தும் கூட இஸ்ரவேல் புத்திரரின் சபையார் எல்லாரும் மோசேக்கும்,ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்து, 'நீங்கள் கர்த்தரின் ஜனங்களை கொன்று போட்டீர்கள் " என்றார்கள்.ஆனால் சபையார் மோசேக்கும்,ஆரோனுக்கும் விரோதமாக கூடி ஆசாரிப்பு கூடாரத்துக்கு நேரே பார்க்கிறபோது,மேகம் அதை மூடினது,கர்த்தரின் மகிமை வெளிப்பட்டது.

அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி, 'இந்த சபையாரை விட்டு விலகிப் போங்கள். ஒரு நிமிஷத்திலே அவர்களை அதமாக்குவேன் " என்றார்.

மோசேயும்,ஆரோனும் முகங்குப்புற விழுந்தார்கள். மோசே ஆரோனிடம், 'சீக்கிரம் நீ தூபகலசத்தை எடுத்து,பலிபீடத்திலிருக்கிற அக்கினியை அதில் போட்டு,அதின் மேல் தூபவர்க்கம்

இட்டு,சீக்கிரமாய் சபையினிடத்தில் போய்,அவர்களுக்காக பாவநிவிர்த்தி செய் கர்த்தருடைய சந்நிதியிலிருந்து கடுங்கோபம் புறப்பட்டு,ஜனங்களை வாதைகளால் அடிக்கத் தொடங்கியது'' என்றான்.

ஆரோன் மோசே சொன்னபடியே செய்து,அதை எடுத்துக் கொண்டு சபையின் நடுவில் ஓடினான். ஜனங்களுக்குள்ளே வாதை தொடங்கியிருந்தது. அவன் தூபவர்க்கம் போட்டு ஜனங்களுக்காக பாவநிவிர்த்தி செய்து செத்தவர்களுக்கும்,உயிரோடிருந்தவர்களுக்கும் நடுவே நின்றான். அப்பொழுது வாதை நிறுத்தப்பட்டது.

இருப்பினும் கோராகின் காரியத்தினிமித்தம் செத்தவர்கள் தவிர, அந்த வாதையினால் செத்துப்போனவர்கள் பதினாலாயிரத்து எழுநூறு பேர்.

ஆசாரிய வேலையை செய்வதிலிருக்கும் பிரச்சினையை தீர்ப்பதற்காக கர்த்தர் மோசேயிடம், 'ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் ஒரு தலைவரை தெரிந்தெடுத்து,அவர்களுடைய கோலை எடுத்துக் கொண்டு வா. அவனவன் கோலில் அவனவன் பேரை எழுதுவாயாக. லேவியினுடைய கோலின் மேல் ஆரோனின் பேரை எழுதக்கடவாய். ஆவைகளை ஆசாரிப்பு கூடாரத்திலே நான் உங்களை சந்திக்கும்,ஸ்தானமாகிய சாட்சிப் பெட்டிக்கு முன்னே வைக்கக்கடவாய். அப்பொழுது நான் தெரிந்து கொள்ளுகிறவனுடைய கோல் துளிர்க்கும் இப்படி இஸ்ரவேல் புத்திரர் உங்களுக்கு விரோதமாக முறுமுறுக்கிறதை என்னை விட்டு ஒழியப்பண்ணுவேன்'' என்றார்.

மோசே,கர்த்தர் கட்டளையிட்டபடியே செய்தான். மறுநாள், மோசே சாட்சியின் கூடாரத்துக்குள் பிரவேசித்தபோது ஆரோனின் கோல் ஒரு இராத்திரியில் துளிர்திருந்தது மட்டும் அல்லாமல் அது பூப்பூத்து வாதுமை பழங்களை கொடுத்திருப்பதையும் கண்டான்.

மோசே எல்லோருடைய கோலையும் வெளியே கொண்டு வந்தான். ஜனங்கள் அதை பார்த்து ஆச்சரியப்பட்டார்கள். ஆரோனின் கோல் அந்த கலகக்காரருக்கு விரோதமான அடையாளமாக இருக்கும்படி அது திரும்பவும் சாட்சிப் பெட்டிக்கு முன்னே வைக்கப்பட்டது.

அந்த நாள் முதல்,ஜனங்கள் செத்துவிடுவோம் என பயந்து,வாசஸ்தலத்தின் கிட்டே வரக்கூட துணியவில்லை.

இந்த பாடம் மிகவும் முக்கியமானது ,ஏனென்றால் ஆவிக்குரிய தலைவர்களை தேவன் தான் தேர்ந்தெடுப்பார் என்பதை விளக்கி காட்டுகிறது. ஒரு நபர் நான் தான் தலைவன் என்று அறிவிப்பதால் தேவனுடைய கரம் அவரோடு இருக்கிறது என்று அர்த்தமாகாது.

இந்த பாடத்தின் முக்கியமான உண்மை ஏன்னவென்றால், தேவன் நியமித்த தலைவர்களுக்கு எதிராக கலகம் செய்தால் அதற்கு பின்விளைவுகள் நிச்சயம் என்பதே.

இந்தப் பாடத்தை திரும்பி பார்க்க பின்வரும் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.

1. கோராகும்,அவனை சேர்ந்தவர்களும் மோசேயை பற்றி கூறிய புகார் என்ன? (6 நொடிகள் நிற்கவும்)
   'நீங்கள் மிஞ்சிப்போகிறீர்கள் கர்த்தர் எங்கள் எல்லாரோடும் இருக்கிறார் என கூறினார்கள் என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

2. இந்த குற்றச்சாட்டிற்கு மோசேயின் பதில் என்ன? (6 நொடிகள் நிற்கவும்)
   'தன்னுடைய ஜனங்களை யார் வழிநடத்த வேண்டும் என்பதை கர்த்தர் தெரிந்தெடுப்பார்' என மோசே கூறினான் என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

3. கலகக்காரர்களை தண்டிக்க கர்த்தர் என்ன செய்தார்? (6 நொடிகள் நிற்கவும்)
   'பூமி தான் வாயை திறந்து, அவர்களையும் அவர்கள் குடும்பங்களையும் விழுங்கியது' என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

4. மறுபடியும் யார் ஆசாரிய ஊழியம் செய்ய வேண்டும் என்பதை கர்த்தர் எவ்வாறு உறுதிபடுத்தினார்? (6 நொடிகள் நிற்கவும்)

‘கர்த்தர் ஆரோனுடைய கோலை துளிர்க்க செய்ததும் அல்லாமல் இஸ்ரவேலுக்கு அடையாளமாக அது பூப்பூத்து வாதுமை பழங்களையும் கொடுக்கவும் செய்தார்.
என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

இதில் உங்களுக்கான வீட்டுப்பாடம் என்னவென்றால், குறைந்தது மூன்று முறையாவது இந்தக் பாடத்தைக் கேளுங்கள். நீங்கள் இந்தக் பாடத்தை கேட்கும் போது இது எப்படி நடத்திருக்கும் என்று உங்கள் மனதில் கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு உங்கள் சொந்த வார்த்தையிலே திரும்ப சொல்லுங்கள்.

பாடத்தை திரும்ப திரும்ப கேட்டு சொல்லிப் பாருங்கள். நீங்கள் சரியாக சொல்லுகிறீர்கள் என்ற நம்பிக்கை உங்களுக்குள் வரும் வரைக்கும் சொல்லிப் பழகுங்கள். அதற்காக 45 நிமிடம் ஒதுக்கி கற்றுக் கொள்ளுங்கள்.

இந்தப் பாடத்தை பற்றி இதுவரை அறியாத யாராவது ஒருவரிடம் சொல்லவும். ‘இன்று சபையிலே தலைவர்களை உண்மையாகவே யார் தெரிந்தெடுக்கிறார்கள் என்பதை பற்றி நமக்கு இந்த பகுதி கற்பிப்பது என்ன? என்று கேட்கவும். பதில்களை கலந்துரையாடவும்.

புாடம் முடிந்தது